# வணிகர் நல வாரியத்தின் மூலம் ஏராளமான நலத் திட்டங்கள்!

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

கழக அரசு அமைந்த பிறகு இவ்வாரியத்தின் மூலமாக ஏராளமான நலத்திட்ட முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுப்பினர்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரியும்.

➢கல்வி உதவித் தொகையாக ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 ஆயிரம் ரூபாயும், தொழிற்கல்வியாக இருந்தால் 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், 94 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளார்கள்.

➢வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவித் தொகையாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்ட நிதியை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கி வருகிறோம்.

➢வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்பட்டால், அவர்களது குடும்பத்துக்கு ஒரு லட்சம் வழங்கப்பட்ட நிதி உதவியை 3 லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 390 குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

➢வியாபார நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டால், 5 ஆயிரம் ரூபாய் என வழங்கப்பட்ட நிதியை 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தினோம். 29 உறுப்பினர்கள் இந்த நிதி உதவியைப் பெற்றுள்ளார்கள்.

➢விபத்து உதவியாக 25 ஆயிரம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளோம்.

➢இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவ சான்றின் பேரில் 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

➢பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

➢விளையாட்டு வீரர்களுக்கான நிதி உதவியும் 3 ஆயிரம் ரூபாய் முதல் 25 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

➢நலிவுற்ற வணிகர்கள் திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை அல்லது மூன்று சக்கர மிதி வண்டி வாங்க 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

### 8,883 வணிகர்களுக்கு ரூ.3.29 கோடி நிதி உதவி!

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 8 ஆயிரத்து 883 வணிகர்கள் பல்வேறு நிதி உதவிகளைப் பெற்றுள்ளார்கள். 3 கோடியே 29 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

வருங்காலத்திலும் இது போன்ற பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் விக்கிரமராஜா மற்றும் நிர்வாகிகள் அடிக்கடி என்னை வந்து சந்திப்பார்கள். அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வழங்கிக் கொண்டு வருகிறோம்.

சமீபத்தில் கூட உள்ளாட்சி அமைப்புக்களால் கடைகளுக்கு திறப்பு விழா, ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் வணிக உரிமங்கள் 1.4.2024 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தால் போதும் என்ற வகையில் இதற்குரிய விதிகள், திருத்தி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் கடைகளுக்கான குத்தகை 9 ஆண்டுகள் என்று இருந்ததை 12 ஆண்டுகள் என விதிகளில் திருத்தம் செய்து 1.8.2024 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

> “விக்கிரமராஜா மற்றும் நிர்வாகிகளை சமீபத்தில் சந்தித்தபோது தமிழ்நாட்டின் அனைத்துக் கடைகளிலும் தமிழில் பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதுபோன்ற செயல்கள் நாங்கள் சொல்லி, நீங்கள் செய்வதாக இல்லாமல், நீங்களே முன்வந்து செய்வதாக இருக்க வேண்டும்.
>
> தமிழ்நாட்டின் வீதிகளில் தமிழை காணமுடியவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. அந்த அளவுக்கு பெயர் பலகைகளில் தமிழில் மாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”

### தமிழில் பெயர்ப்பலகைகள்!

விக்கிரமராஜா மற்றும் நிர்வாகிகளை சமீபத்தில் சந்தித்தபோது தமிழ்நாட்டின் அனைத்துக் கடைகளிலும் தமிழில் பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதுபோன்ற செயல்கள் நாங்கள் சொல்லி, நீங்கள் செய்வதாக இல்லாமல், நீங்களே முன்வந்து செய்வதாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் வீதிகளில் தமிழை காண முடியவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. அந்த அளவுக்கு பெயர் பலகைகளில் தமிழில் மாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படை நோக்கம் கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை. அது உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

மிகப்பெரிய தொழிற்சாலைகள் மட்டுமல்ல - சிறுகடைகளும், வியாபாரிகளும் தங்களது வணிகத்தை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு கவனமாக இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சிறு வணிகர்களும், வணிக நிறு வனங்களும் நிதி வளர்ச்சிக்கு மட்டுமல்ல, மனித வளர்ச்சிக்கும் அடிப்படையானவை. இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதாக அமைந்துள்ளது.

### வணிகர்களுக்கான அமைதியான மாநிலம்!

வணிகர்கள் தங்கள் வணிகத்தை அமைதியாக நடத்தும் வகையில் அமைதிமிகு மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. உங்களது வணிகத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுதான் தமிழ்நாடு அரசின் கொள்கை. அதுபோலதான் செயல்படுகிறோம்.

உங்களது கோரிக்கைகளை எப்பொழுது வேண்டுமென்றாலும் எங்களைச் சந்தித்துச் சொல்லலாம். ஆண்டுதோறும் வணிகர் சங்கப் பேரவை மாநாடுகளில் நானோ அல்லது அமைச்சர்களோ கலந்து கொள்கிறோம்.

நமக்கு இடையில் இடைத்தரகர்கள் கிடையாது, இருக்கவும் கூடாது. எனவே, இதனை மனதில் வைத்து வர்த்தகமாக இல்லாமல் சேவை மனப்பான்மையுடனும் மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நான் செல்ல வேண்டிய காரணத்தினால், இந்தக் கூட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று நடத்தயிருக்கிறார்கள். உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள். நான் அவர்களிடத்தில் கலந்து பேசிவிட்டு, அதிகாரிகளிடத்திலும் கலந்து பேசிவிட்டு, அதற்கு பிறகு அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பட்ஜெட்

## முதல் பக்கத் தொடர்ச்சி

வேலை வாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாடு உள்பட 5 அம்ச திட்டத்துக்கு 2லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்தார். உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு பத்து லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும் என்றும் பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில், ஒரு கோடி ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு வீடு கட்டித்தர 10 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தெரிவித்தார். பணிபுரியும் மகளிருக்காக நாடுமுழுவதும் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

### பஞ்சாப் மாநிலமும் புறக்கணிப்பு!

ஒன்றிய பட்ஜெட்டில் தனது கூட்டணி கட்சிகள் ஆளும் ஆந்திரா, பீகார் மாநிலங்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ள பாஜக அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு எந்த வளர்ச்சி திட்டங்களையும் அறிவிக்கவில்லை. இந்த நிலையில், ஒன்றிய பட்ஜெட்டில் பஞ்சாப் மாநிலமும் புறக்கணிக்கப்படுவதாக கூறி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் மாநில தலைவருமான ராஜா பிரார் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பேசிய ராஜா பிரார், பஞ்சாப் மாநிலத்தின் மீதான ஒன்றிய அரசின் பாகுபாடு நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### வருமான வரியில் சிறிய மாற்றம்!

வருமான வரித்திட்டத்தில் மாற்றம் செய்து பட்ஜெட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதன்படி, 3 லட்சம் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் 3 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 7 லட்சம் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 5 சதவிகிதம் வரியும், 7 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 10 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 10 சதவிகிதம் வரியும், 10 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 15 சதவிகிதம் வரியும் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 லட்சம் ரூபாய்க்கு மேல் முதல், 15 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 20 சதவிகிதம் வரியும்,

15 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுவோருக்கு 30% வரி விதிக்கப்படும் என்றும் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

வருமான வரி முறையில் வரி சலுகை பெறுவதற்கான நிலையான கழிவு (Standard Deductions) 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வருமான வரி விலக்கு உச்சவரம்பு 5 லட்சம் ரூபாய் வரை உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மாத சம்பளதாரர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

ஒன்றிய நிதியமைச்சர் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையில், 3 வகையிலான புற்றுநோய் மருந்துகளுக்கு, சுங்க வரியிலிருந்து முழுமையாக வரிவிலக்கு அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், செல்போன் உதிரிபாகங்கள், சார்ஜர்கள் மீதான சுங்கவரி 15 சதவீதமாக ஆக குறைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல், தங்கம் மற்றும் வெள்ளி மீதான சுங்க வரி 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதம் ஆகவும், பிளாட்டினத்தின் மீதான சுங்க வரி 15 சதவீதத்தில் இருந்து 6.5 சதவீதம் ஆகவும் குறைத்து அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 தாது பொருட்களுக்கு வரி விலக்கு அளித்து பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தஞ்சை டெல்டா ரெயில் பாதையை

# இருவழிப்பாதையாக மாற்ற நிதி ஒதுக்கிடுவீர்!

## மாநிலங்களவையில் மு. சண்முகம் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூலை 24-

“தஞ்சை டெல்டா ரெயில் பாதையை இருவழிப்பாதையாக மாற்ற நிதி ஒதுக்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு. சண்முகம் வேண்டுகோள் விடுத்தார். இது குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செய லாளருமான மு.சண்முகம் அவர்கள் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:-

தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் இருக்கக் கூடிய பொதுமக்கள் தஞ்சாவூர் ரயில்வே பாதையை இருவழிப் பாதையாக மாற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

விழுப்புரம் - தஞ்சாவூர் மெயின் லைனில், கும்பகோணம் மயிலாடுதுறை வழியாக இரு வழிப்பாதை அமைக்கப்பட வேண்டும். இந்த பாதை சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில், மயிலாடுதுறை, கும்பகோணம் போன்ற புண்ணிய திருத்தலங்களை உள்ளடக்கிய பாதையாகும். இதனால் சுற்றுலா பயணிகள் அதிகமாக வரக்கூடிய இடங்களை இந்த ரயில்வே பாதை கடந்து செல்கிறது. இந்த மெயின் லைன் என்பது மிகப் பழமையான ஒரு பாதையாகும்.

பயணிகள் மற்றும் சரக்குகள் போக்குவரத்து நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு வழித் தடமாகும் இது. இந்தத் திட்டம் வெகு நாட்களாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. இதற்குரிய சர்வே முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழியை இருவழிப் பாதை யாக்கி னால் பயணிகளின் எண்ணிக்கை கூடும். அவர்களுக்கான பயண நேரம் குறையவும் வாய்ப்பு உண்டாகும். ரயில்வேத் துறை அமைச்சர் அவர்களையும், நிதித்துறை அமைச்சர் அவர்களையும் இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்குரிய நிதியினை ஒதுக்கீடு செய்து இந்த பாதையை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு வருவதற்கு ஆவன செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மு. சண்முகம் பேசினார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் 50.ஆயிரம் மரக்கன்று நடும் நிகழ்ச்சி!

திருவள்ளூர் ஜூலை 24 .

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 50,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி புல்லரம்பாக்கம் கிராமத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ. உமா மகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி மா.செ.ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றி மரக்கன்று நடும் விழா தொடங்கி வைத்தார் இதன் முன்னதாக கழகக் கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் பேரறிஞர் அண்ணா பெரியார் அவர்களின் திருவுரு வப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இதில் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய செயலாளர்கள் ஆர். ஜெயசீலன், பிரேம் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் டி. தென்னவன், ஊராட்சி மன்ற தலைவர் தமிழ்வாணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தியாகராஜன் ஆவடி மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த் ஒன்றிய கழக நிர்வாகிகள் மனோகரன், வேலாயுதம், மதுரை வீரன், புன்னை குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பி.கே.இ. கபிலன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நெல்லை மாவட்டத்தில்

# வனத்துறை பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை!

## அமைச்சர் மதிவேந்தன் மேற்கொண்டார்!

நெல்லை, ஜூலை 24-

நெல்லை களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குனர் அலுவலகத்தில் வனத்துறையின் பணிகள் தொடர்பாக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, குமரி,ஆகிய 4 மாவட்ட வன அலுவலர்களுடன் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் சுதான் சி குப்தா,களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக வனப்பாதுகாவலர் மாரிமுத்து,சுழலியல் மேம்பாட்டு அலுவலர் அன்பு, நெல்லை மாவட்ட வன அலுவலர் முருகன், தூத்துக்குடி மாவட்ட வன அலுவலர் ரேவட் ராமன், கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலர் பிரசாத்,சமூகக் காடுகள் கோட்ட மாவட்ட வன அலுவலர் இளங்கோ, களக்காடு முண்டந்துறை துணை இயக்குனர் ராமேஸ்வரன் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக அமைச்சர் மதிவேந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

வனத்துறையில் பணியாளர் பற்றாக்குறையை போக்கும் வகையில் டி.என்.பி.சி.மூலம் புதிய பணியாளர்கள் நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது. யானைகளை கண்காணிக்க, பாதுகாக்க, வேட்டை தடுப்பு காவலர்கள் உட்பட பலர் இருக்கிறார்கள்.இதற்காக கூடுதல் நிதியும் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்.இதற்காக தனியாக குழு அமைக்க முடியாது. காட்டுப் பன்றிகளை வனவிலங்கு பட்டியலில் இருந்து நீக்குவது குறித்து ஏற்கனவே சட்டமன்றத்தில் பேசி இருக்கிறேன்.இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. மாஞ்சோலை விவகாரம் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. ஆகையால் அதைப் பற்றி பேச முடியாது.வனத்துறை சார்பில் நீதிமன்றத்தில் நிலை அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. மணிமுத்தாறு பகுதியில் அமைய இருந்த பல்லுயிர் பூங்கா திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட விவகாரம் குறித்த வனத்துறை அதிகாரிகளுடன் பேசி இது தொடர்பாக பதில் அளிக்கிறேன். இடம் தொடர்பாக ஏதேனும் பிரச்சனை இருக்கலாம்.அதனால் மாற்றப்பட்டு இருக்கலாம்.

வன விலங்குகளையும் பாதுகாக்க வேண்டும்,மக்களும் முக்கியம். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வ னப் பகுதியில் குற்றங்களை குறைக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வாகப், மாநகராட்சி மேயர் (பொறுப்பு)ராஜு, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், தேவலாய பணியாளர்கள் உபதேசியார்கள் நல வாரிய தலைவர் விஜிலாசத்யா னந்த்,

பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, பாளை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வேலங்குளம் கண்ணன்,ஒன்றிய செயலாளர்கள் போர்வல் கணேசன், செல்வ கருணாநிதி, மத்திய மாவட்ட துணை செயலாளர் தர்மன், மாநகர துணை செயலாளர் பிரபு பாண்டியன்உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

**விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**பொருளாளர் பொறுப்பு**

**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம்... ரூ.5000/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/ - கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.